# Studies That Have Been Done: Studies to be Done - Folk Deities and Worship of the Rajapalayam Region

**Dr. M. Prakash**
*Assistant Professor & Research Supervisor, Department of Tamil*
*Vels Institute of Science Technology & Advanced Studies, Pallavaram*

**R. Kavitha**
*Ph.D. Research Scholar (Part Time), Department of The Tamil*
*Vels Institute of Science Technology & Advanced Studies, Pallavaram, Chennai*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358744

**Abstract**

*The Eighth Editions are an important part of Sangam period Tamil literature. They include eight books namely Natrinai, Kurunthokai, Aingurunuru, Pathitruppattu, Paripadal, Kalithokai, Akananuru, and Purananuru. These books depict the lives of women, their feelings, social status, and culture. Feminism is the concept of women's rights, equality, and their social, economic, and political rights. In the Eighth Editions, women are depicted in various forms as leaders, mothers, lovers, and heroes. This collection of essays examines the female characters found in the Eighth Editions, their social status, culture, and ideas about feminism. This study summary discusses the ideas of feminism in the eight volumes of books, the depictions of women's lives, social status and culture. This study summary will serve as a starting point for the study of feminism in the eight volumes of books.*

*Keyword: Tamil Literary Grammar, Feminism*

**References**

1. Tholkappiyam, No. 115, Text by Ilampooranar, Kazhagam Publications, Chennai.
2. Purananuru Moolamum Ulayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai, Thirukkural, Parimelazhagaar, p-38.
3. Tholkappiyam, Karpiyal, No. 3
4. Kurunthokai Moolamum Ulayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai.
5. Aingurunuru Moolam Uthayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai.
6. Akananuru Moolam Uthayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai.
7. Natrinai Moolam Uthayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai
8. Patitrupattu Moolam Uthayum, Alice. A , p:168

# நிகழ்ந்த ஆய்வுகள் : நிகழ வேண்டிய ஆய்வுகள் – இராஜபாளைய வட்டார நாட்டுப்புற தெய்வங்கள் மற்றும் வழிபாடு

*ரா. கவிதா*
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை

*முனைவர் ம. பிரகாஷ்*
உதவிப் பேராசிரியர், நெறியாளர், தமிழ்த்துறை
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*நாட்டார் மக்களின் வழிபாட்டுத் தெய்வங்கள் எல்லாம் பெருந்தெய்வ, சிறுதெய்வ நோக்கில் அமைந்தாலும், இரண்டுக்கும் ஓரே நிலையில் தோற்றமும் அமைகின்றது. தெய்வங்கள் மக்களின் கனவு, எதிர்பாராத சம்பவம் என்ற செயல்களின் மூலம் தோன்றி மறைந்து விடுகின்றன. இவற்றை, மெய்மைப்படுத்தும் காரணமாக ஆவி ஒன்றினை நிலைநிறுத்திக் கொள்கின்றனர். அச்செயலே, ஆவியின் மேல் அச்சமுற்று தனக்குத் தீங்கு நிகழாமல் இருக்க வழிபடத் தொடங்கியது எனில், ஓர் இடத்தில் தெய்வ வழிபாடு தொடங்குவதற்கு முன், அங்கு ஆவியானது தோன்றி மனிதர்களுக்கு ஏதாவதொரு வடிவில் (குரலாகவோ, உருவமாகவோ) காட்சி அளித்து மறைந்துவிடும். அந்த இடத்தில் அங்கு வாழும் மக்கள் வழிபடத் தொடங்கினர் என்பது, விருதுநகர் நாட்டுப்புற மக்களின் வாய்மொழிக் கதைகளினால் தெய்வ வரலாறுகளை அறிதல் ஆய்வின் கருதுகோளாக அமைகிறது.*

***திறவுச்சொல்:*** *நாட்டார் மக்களின் வழிபாட்டுத் தெய்வங்கள், வாய்மொழிக் கதைகள், காவல் தெய்வங்கள்.*

### அருள்மிகு நீர் காத்த அய்யனார் திருக்கோயில்

* திருவிழா * சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைத் திருவிழா. *தல சிறப்பு * மேற்குத் தொடர்ச்சி மலையின் அடி வாரத்தில், பாலாறு, நீராறு ஒன்றாக சேரும் ஆற்றங்கரை ஓரத்தில் நீர் காத்த அய்யனார் அருளாட்சி செய்து கொண்டிருக்கிறார். இவருக்கு வலது புறம் பூர்ணா, இடதுபுறம் புஷ்கலா தேவியார் வீற்றிருக்கின்றனர்.

### *பொது தகவல்*

பழங்காலத்திலிருந்தே தமிழக மக்கள் விடாது வணங்கி வரும் வீரத்தெய்வங்களுள் மிகச் சிறப்பு மிக்க காவல் தெய்வமாக கருதப்படுவது அய்யனார் ஆகும். அய்யனார் ஊர் மக்களை தீய சக்திகளிலிருந்து காப்பதற்காக எப்போதும் இரவு நேரங்களில் குதிரை மீது சவாரி போவார் என்று மக்கள் நம்புகிறார்கள்.

அய்யனார் நாட்டுப்புறத் தெய்வங்களில் மேல்நிலை ஆக்கத் தெய்வமாக மதிக்கப்படுகிறார். இவர் பல ஊர்களில் பல்வேறு பெயர்களில் வழிபடப்படுகிறார். அய்யனாரை ஐயனார் என்றும் எழுத்து மொழியில் எழுது வோம். ஐ என்றால் தலைமை, அழகு, வியப்பு, அரசன், ஆசான், கடவுள், தந்தை என பல பொருள்படும்.

**பிரார்த்தனை**

குடும்பத்தில் நிலவும் பிரச்சனைகளையும், குறைகளையும் போக்கவும் இங்கு வந்து வழிபடலாம்.

**நேர்த்திக்கடன்**

பிரார்த்தனை நிறைவேறியதும் அபிஷேகம் செய்து, தங்களால் இயன்ற பொருளுதவி, அன்னதானம் செய்தும் நேர்த்திக்கடன் செய்கின்றனர்.

**தலபெருமை**

ராஜபாளையம் நகரின் நீர் வளத்திற்கும், நில வளத்திற்கும், தொழில் வளத்திற்கும் ஆதார தெய்வமாக நீர் காத்த அய்யனார் விளங்குகிறார். அத்துடன் தன்னை வேண்டி வரும் பக்தர்களின் குறைகளை கேட்டு வரம் வழங்கம் சத்திய முர்த்தியாகவும், இந்நகர் மக்களின் செழுமைக்கும், நீர் உற்பத்தி ஆதாரமாகவும், மக்களின் அன்றாட வாழ்க்கைக்குஉற்றதுணையாககாத்தமுர்த்தியாக காக்கும் கடவுளாக, அருள்மழை பொழிபவராக அய்யனார் அருள்பாலிக்கிறார். மேலும் இந்தக் கோயிலில் வனலிங்கம், தலைமைசுவாமி, பெருமாள், லட்சுமி, சின்ன ஒட்டக்காரசாமி, பெரிய ஒட்டக்காரசாமி, வனகாளி, மாடம், மாடத்தி, ரக்காச்சி அம்மன், வனப்பேச்சியம்மன், கருப்பசாமி, தர்மராஜர், சப்தகன்னிமார் ஆகிய தெய்வங்கள் அருள்பாலிக்கிறார்கள்.

ஒரு முறை மீனாட்சி கோயில் கொடி மரத்திற்காக சின்ன ஒட்டக்காரன், பெரிய ஒட்டக்காரன் என்ற இருவரும் ராஜபாளையம் வந்தார்கள். இந்த மேற்கு தொடர்ச்சி மலையில் அய்யனாரின் கட்டுப்பாட்டில் உள்ள மரங்கள் மீனாட்சியின் கொடி மரத்திற்கு சரியாக இருக்கவே அதனை ஆட்களை கொண்டு வெட்டினார்கள்.

அப்போது வெட்டிய இடத்திலிருந்து ரத்தம் வடிந்தது. இதனால் சின்ன ஒட்டக்காரன், பெரிய ஒட்டக்காரன் இருவரும் பதறிப் போனார்கள். இந்த விஷயம் அய்யனாருக்கு தெரிந்தது.

கோபமடைந்த அய்யனாரிடம் மதுரை மீனாட்சி கோயில் கொடி மரத்திற்காகத்தான் மரம் வெட்டினோம் எங்களை மன்னித்து விடுங்கள் என்று மன்றாடினார்கள். அய்யனாரும் இவர்களை மன்னித்து நீங்கள் செய்த குற்றத்திற்கு கொடி மரத்தை சேர்த்து விட்டு வந்து எனக்கு காவல் தெய்வங்களாக இருக்க வேண்டும் என்று கூறி அனுப்பி விடுகிறார்.

மதுரை மீனாட்சி கோயிலில் கொடிமரம் நட்டு விட்டு கிளம்பியபோது, மீனாட்சி இவர்களை போகவேண்டாம் என்கிறார். இதனால் மீண்டும் கோபம் கொண்ட அய்யனார் மதுரை மக்கள் அனைவருக்கும் உடல்நலமில்லாமல் போக செய்து விடுகிறார்.

இதனால் மீனாட்சி இவர்கள் இருவரையும் அழைத்து, அய்யனாரின் விருப்பப்படி அவருக்கு காவல் தெய்வங்களாக இருங்கள். வருடம் ஒரு முறை மூன்று மாலைகளுடன் வந்து உங்களை பார்க்கிறேன் என்று கூறி அய்யனாரிடம் அனுப்பி விடுகிறார். இன்றும் கூட அய்யனாருக்கு சின்ன ஒட்டக்காரன், பெரிய ஒட்டக்காரன் இருவரும் தான் காவல் தெய்வங்களாக இருக்கிறார்கள்.

**தல வரலாறு**

வெகு காலத்திற்கு முன்பே தமிழகத்தில் அய்யனார் வழிபாடு இருந்து வந்தாலும், கி.பி. பத்தாம் நூற்றாண்டில் சோழ நாட்டில் அய்யனாருக்கு கோயில் அமைக்க முதலாம் ராஜராஜ சோழன் ஏற்பாடு செய்திருக்கிறான்.

இதன்பின்னர் தான் தமிழகத்தில் மற்ற பகுதிகளில் அய்யனார் கோயில்கள் கட்டப் பட்டுள்ளன. ராஜபாளையம் நீர்காத்த அய்யனார் கோயிலும் அந்த காலக்கட்டத்தில்

கட்டப்பட்டது தான்.

பராக்கிரம பாண்டியன் என்பவனது ஆட்சியில் நாட்டின் மேற்குப்பகுதியான இந்த அய்யனார் கோயில் பகுதியை கேரள பந்தள தேச மன்னன் ஆக்கிரமிப்பு செய்தான். அவனை விரட்டியடிக்க பாண்டிய மன்னன், சின்னையா தேவன் என்பவனது தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தான். அந்த வீரர்கள் மதுரையிலிருந்து கிளம்பி ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் வழியாக மேற்கு தொடர்ச்சி மலை சென்று பந்தள மன்னனின் படைகளை விரட்டி அடித்தனர்.

இதன்பின் பாண்டிய மன்னனின் படைவீரர்கள் தங்களது நாடு திரும்ப அய்யனார் கோயில் அருகே உள்ள ஆற்றின் வழியாக வரும்போது, திடீரென ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இந்த வெள்ளத்தில் சிக்கி கொண்ட பாண்டிய படை வீரர்கள் தங்களை காத்து அருளும்படி அய்யனாரை வேண்டிக் கொண்டனர். அப்போது ஆற்றின் கரையில் இருந்த ஒரு பெரிய மரம் திடீரென கீழே விழுந்து ஆற்றை கடக்க உதவும் பாலம் போல இருந்தது.

பாண்டியன் படைவீரர்களும் அந்த ஆற்றின் குறுக்கே விழுந்த மரத்தின் மேல் நடந்து உயிர் தப்பினர். இவ்வாறு நீரை காத்து பாண்டியன் படையை காத்ததால் இந்த அய்யனார் நீர் காத்த அய்யனார் என அழைக்கப்பட்டார்.

### எரிச்சீஸ்வர அய்யனார்

எரிச்சீஸ்வர அய்யனார் வழிபாடு என்பது தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் பரவலாகக் காணப்படும் நாட்டார் தெய்வ வழிபாடாகும், இவர் காவல் தெய்வமாக கிராமங்களைக் காப்பவர்; குறிப்பாக, ராஜபாளையம் அருகே கீழராஜகுலராமன் கிராமத்தில் இவருக்குப் பெரிய கோவில் உள்ளது, மேலும் ஐயனார் குதிரை வாகனத்தில் அமர்ந்த நிலையில், கிராமத்திற்கு வளமும் நலமும் தருபவராக வணங்கப்படுகிறார்.

### ஐயனார் வழிபாடு பற்றிய பொதுவான தகவல்கள்

- காவல் தெய்வம்: ஐயனார் கிராமங்களின் காவல் தெய்வமாகக் கருதப்படுகிறார், விவசாய மக்களால் அறுவடைக்குப் பிறகு திருவிழாக்கள் எடுக்கப்பட்டு வணங்கப்படுகிறார்.
- உருவ அமைப்பு: சுதையால் ஆன உருவத்தில், பீடத்தில் அமர்ந்த நிலையிலோ அல்லது குதிரை வாகனத்தின் மீதோ காட்சியளிப்பார்.
- பரவல்: தென்னிந்தியா மற்றும் இலங்கையில் ஐயனார் வழிபாடு உண்டு, பழங்காலத் திலிருந்தே தமிழர் மத்தியில் இது உள்ளது.

### எரிச்சீஸ்வர அய்யனார்

- கோயில்: ராஜபாளையம் அருகிலுள்ள கீழராஜகுலராமன் கிராமம் இவரது முக்கியக் கோயில்களில் ஒன்று, இங்கு மகா கும்பாபிஷேகங்கள் நடைபெற்றுள்ளன.
- வழிபாடு: இவர் கிராம மக்களின் வளத்தையும் நலத்தையும் காக்கும் தெய்வமாகப் போற்றப்படுகிறார்.
- இந்து சமயக் கதையின்படி, முன்பொரு காலத்தில், காஞ்சனா எனும் காட்டுப் பகுதியை, சூலபாணி எனும் அசுர மன்னன்

### மூங்கில் இணை காமாட்சி அம்மன்

வங்கிசபுரி எனும் நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். இவன் சிவபெருமானை நோக்கிக் கடுமையான தவம் புரிந்து பல அரிய வரங்களைப் பெற்றிருந்தான். அதில் தனக்குத் தன்னைக்காட்டிலும் அதிக வலிமையுடன், தான் பெற்ற அரிய சக்திகளுடன் ஆண் மகன் ஒருவன் பிறக்க வேண்டும் என்பதும் ஒன்று. இந்த தவத்தின் பலனால் அவனுக்கு வலிமையான ஆண்மகன் பிறந்தான். அவனுக்கு வச்சிரதந்தன் எனும் பெயரிட்டு வளர்த்து வந்தான். பின்னர் அவனை அப்பகுதியின் அரசனாக்கினான். அவனுக்கு மாங்குசானன் என்பவன் அமைச்சராகவும், துட்டபுத்தி என்பவன் தளபதியாகவும் இருந்தனர். இவர்களிருவரின் ஆலோசனைப்படி காட்டுப் பகுதியிலிருந்த

தவசிரேஷ்டர்களையும், வேத விற்பன்னர்களையும் கொடுமைப்படுத்தத் தொடங்கினான். பிறப்பிலேயே பல்வேறு சக்திகளைப் பெற்றிருந்ததால் அவனை யாராலும் எதிர்க்க முடியவில்லை.

"பாதிக்கப்பட்டவர்கள் அவனுடைய தொல்லைகள் பற்றி பிரம்மனிடம் சென்று முறையிட்டனர். அவரும் வச்சிரதந்தனை அழிக்க தேவேந்திரனை அனுப்பி வைத்தார். தேவேந்திரன் வச்சிரதந்தனின் தளபதியான துட்டபுத்தியின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தனது படையையும் இழந்து போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டான். இப்படி ஓடிய தேவேந்திரன் வச்சிரதந்தனை பராசக்தியால் தான் அழிக்க முடியும் என்று கருதி பிற தேவர்களுடன் பராசக்தி காமாட்சியம்மனாக எழுந்தருளியுள்ள காஞ்சிபுரம் சென்று அன்னையிடம் வேண்டினர். அவர்களின் வேண்டுகோளை ஏற்ற காமாட்சியம்மன் அவனை அழிக்கப் புறப்பட்டார். வங்கிசபுரி வரும் வழியில் பன்றிமலை என்ற வராகமலையில் இறங்கி துர்க்கையை வச்சிரதந்தனுடன் போரிட அனுப்பி வைத்தார்.

"துர்க்கை அங்கிருந்து புறப்பட்டு வங்கிசபுரி வந்து வச்சிரதந்தனுடன் போர் புரிந்தார். அவனுடைய தலையைத் துண்டித்தார். மீண்டெழுந்து சிங்கத்தலையுடன் நின்றான். அதையும் துண்டித்தார். பின்னர் புலி, கரடி, காட்டெருமை என ஒவ்வொரு தலையுடன் தோன்ற அனைத்தையும் துண்டித்தார் துர்க்கை. இவனை ஒழிக்க காமாட்சியம்மனாலேயே முடியும் என்ற நோக்குடன் துர்க்கை அங்கிருந்து திரும்பினார்.

"துர்க்கை தோல்வியுடன் திரும்பியது கண்டு காமாட்சியம்மன் கோபத்துடன் துர்க்கா தேவியையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து வங்கிசபுரி வந்தார். வச்சிரதந்தன் ஏவிய ஆயுதங்கள் காமாட்சியம்மனை மூன்றுமுறை வலம் வந்து அவனிடமே திரும்பிச் சென்றது. வச்சிரதந்தனும் அந்த அம்மனை வணங்கினான். பின்னர் அம்மனுடன் போரிடத் தொடங்கினான். துர்க்கையுடன் போரிட்டது போல் பல்வேறு தலைகளுக்கு மாறினான். காமாட்சியம்மன் துர்க்கையிடம் வச்சிரதந்தன் தலை துண்டிக்கப்பட்டு தரையில் விழுந்தவுடன் அதைக் காலால் நசுக்கி அழித்து விடும்படி கூறி வச்சிரதந்தனின் தலையைத் துண்டித்தார். துர்க்கையும் அந்தத் தலையைக் காலால் நசுக்கி அழித்தார். அசுரன் மறுதலை எடுக்க முடியாமல் அழிந்தான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.

"அசுரனது தலையை மிதித்த இடம் தலையாறு எனவும், மூளை சிதறிப் போய் விழுந்த இடம் மூளையாறு எனவும், குலைகாய் ஈரல் விழுந்த இடம் குலையூத்து எனவும், உடல் குறுக்காக விழுந்த இடம் குறுக்குமலை எனவும் பெயர் பெற்றன. இன்றும் இந்தப் பகுதியில் இந்தப் பெயர்கள் வழக்கத்திலுள்ளன.

வங்கிசபுரிக்கு அருகில் வேகவதி என்ற ஆறு ஓடிக் கொண்டிருந்தது. இந்த ஆறு மாணிக்கமலைத் தொடரிலிருக்கும் தலையாறு எனுமிடத்தில் மூங்கில் காடுகளுக்கிடையே பாய்கிறது. அசுரனைக் கொன்ற அம்மன் யௌவன வடிவம் கொண்டு இந்நதி அருகில் தவமிருந்தாள். அசுரனைக் கொன்ற பாவம் அம்மனுக்கு நீங்குவதற்காக சப்த கன்னியர்கள், தெய்வப் பெண்கள், துர்க்கை அனைவரும் சேர்ந்து ஆயிரத்தெட்டு தங்கக் குடங்களில் நீரெடுத்து வாசனைத் திரவியங்களுடன் மஞ்சளும் கலந்து அபிசேகம் செய்தனர். கன்னித் தெய்வமாய் பொலிவுறும் காமாட்சியம்மனுக்கு அபிசேகம் செய்த மஞ்சள் நீர் ஆற்றில் கலந்ததால் வேகவதி ஆறாக இருந்த ஆறு மஞ்சளாறு எனப் பெயர் மாற்றமடைந்தது. அம்மன் தலையாற்றின் மூங்கில் காடுகளில் தவமிருந்த இடத்தில் சிறிய கோயில் கட்டப்பட்டுள்ளது. இது அம்மா மச்சு என்று அழைக்கப்படுகிறது.

## முடிவுரை

தெய்வத்தின் கதைகள் எல்லாம் வெவ்வேறு காலச் சூழலினால் தெய்வநிலைக்கு ஏற்றப்பட்டதைக் காணலாம். இத்தெய்வங்கள் இடத்திற்கு இடம்,

காலத்திற்குக் காலம் ஏற்ப தெய்வநிலை எய்திய காரணத்தை அறியமுடிகின்றது. (இத்தெய்வங்கள், முதலில் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்திய பின்னர் சாந்தநிலைக்கு மாறியவை. இந்நிலையே தெய்வ வழிபாட்டிற்கு வழிகோலியது எனலாம். இத்தெய்வ வழிபாடு முதலில் மனதில் சிந்தனை ஏற்படுத்திய உருவமற்ற வழிபாடாகவே காணப்பட்டன. நாளடைவில் அவற்றை ஆவியின் தோற்றம் என்று மக்கள் நம்பினர்.

(இத்தொன்மைக் கதைகள் வாயிலாக சமயத்தை நிறுவனம் செய்யும் மனிதர்களின் செயற்பாடுகளை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும், செயற்பாடானது வழிபாட்டு நோக்கில் எவ்வாறு பிரிந்து செல்கிறது என்பதனையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஒவ்வொரு தெய்வத்தோற்றமும் எவ்வாறு மக்களிடையே நிலவி வருகிறது என்பதையும் அறியமுடிகிறது. நாட்டார் தெய்வங்களின் இத்தோற்றம், உலக சமயங்களின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்தது. கடவுள்களை உருவங்களையும் இச்சமயங்களே நிர்ணயம் செய்வதாக அமைந்துள்ளன.

சமயங்களை எல்லாம் கிராம தெய்வங்கள் தான் தோற்றுவிக்கின்றன எனலாம். ஒவ்வொரு தெய்வதோற்றத்திற்கும்காரணம்தெய்வங்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்வதாகவும் காணமுடிகின்றது. ஆசைகள் மனிதர்களுக்கு மனிதர்மாறுபடுவதுபோன்று,தெய்வங்களுக்கும் ஆசைகள் மாறுபடுவதை இந்த வாய்மொழிக் கதைகள் மூலம் அறியமுடிகின்றது.

தெய்வங்களின் ஆசைகளைப் பின்வருமாறு பகுக்கலாம்.

1. நன்மை மட்டும் செய்தல்
2. நன்மையும் தீமையும் செய்தல்
3. காலம் கருதி செய்தல்

மேற்கூறிய மூன்று நிலைகளும் தெய்வங்கள் மனிதர்களுக்கு நன்மையே அல்லது தீமையோ செய்வதன் அடிப்படையில் உருவானதாகக் காணமுடிகின்றது. இவற்றின் மூலம் வழிபாட்டு நிலைகளும் அமைந்துவிடுகின்றன. அம்மூன்று நிலைக்கூறுகளும் நாட்டார் மக்களின் தெய்வங்களிடமும் மட்டுமன்றி உலக சமய தெய்வங்களிடமும் காணப்படுகின்றன.

**பார்வை நூல்கள்**

1. நாட்டுப்புற தெய்வங்கள் களஞ்சியம், சு. சண்முகசுந்தரம், காவ்யா, சென்னை, 2008.
2. நாட்டுப்புறவியல், சு. சண்முகசுந்தரம், காவ்யா, சென்னை, 2015.